# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2090/11 - 2018 සැප්තැම්බර් මස 25 වැනි අඟහරුවාදා - 2018.09.25

*2090/11 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/81* (VI)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

24இ மற்றும் 24ஈ ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24 இ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24 இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்டதும், "முத்துராஜவெல சூழற் பாதுகாப்பு இடப்பரப்பு" என அழைக்கப்படும் சூழல் பாதுகாப்பு இடப்பரப்பென வெளிப்படுத்துகின்ற 2006 ஆம் ஆண்டின் ஒற்றோபர் 13 ஆந் திகதிய 1466/26 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

(அ) இதன் (இ) என்னும் பந்தியில் "2006, செத்தெம்பர் 15 ஆந் திகதிய" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "2004, செத்தெம்பர் 15 ஆந் திகதிய" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அதற்கான 1 ஆம் அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும் :

**"அட்டவணை 1**

முத்துராஜவெல சூழற் பாதுகாப்பு இடப்பரப்பின் எல்லைகள்

19.08.1997 இன் GAM 2722 ஆம் இலக்க நில அளவையாளர் தலைமையதிபதியின் முதனிலை வரைபடத்தில் காணித்துண்டு 2 ஆகக் குறித்துக்காட்டப்பட்ட வத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பற்றியவெல கிராமத்தின் ராகம்பத்து, மேல் மாகாணத்தின் கம்பஹா

1A – PG 4245 – 1007 (2018/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மாவட்டத்தில் அமைந்துள்ள கஹட்ட மெட வெல்லாய முத்துராஜவெல என அழைக்கப்படும் விஸ்தீரணத்தில் 162.10 ஹெக்ரேயர்கள் கொண்ட அரச காணி இடப்பரப்பு யாவும் பின்வருமாறு எல்லையிடப்படுகின்றது :-

வடக்கு : GAM 2271 ஆம் இலக்க முதனிலை வரைபடத்தின் காணித்துண்டு 2 ;

கிழக்கு : "முத்துராஜவெல சதுப்பு நிலம்" என அழைக்கப்படும் சதுப்பு நிலம் மற்றும் GAM 2271 ஆம் இலக்க முதனிலை வரைபடத்தின் காணித்துண்டு 3 ;

தெற்கு : GAM 2722 ஆம் இலக்க முதனிலை வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு தெற்கு நோக்கி அமைந்துள்ள எலவிற்கும் வட ஆற்றங்கரையிலிருந்து வடக்கு நோக்கி 400 மீற்றர்கள் முன்னோக்கிய சமாந்தரக் கோடு ஒன்று ;

மேற்கு : GAM 2722 ஆம் இலக்க முதனிலை வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு மேற்கு நோக்கி அமைந்துள்ள எலவிற்கும் கிழக்கு ஆற்றங்கரையிலிருந்து கிழக்கு நோக்கி 435 மீற்றர்கள் முன்னோக்கிய சமாந்தரக் கோடு ஒன்று.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2018, செத்தெம்பர் 21.

10-288